**மஹியங்கனை பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹியங்கனை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, தேறிய சொத்துக்கள் தொடர்பான கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹியங்கனை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பரீட்சை மீதியில் வேறுபாடுகளாகக் காண்பித்து தயாரிக்கப்பட்ட தொங்கல் கணக்கில் ரூபா 38,209 ஆன வரவு மீதி இனங்கண்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2003 ஆம் ஆண்டின் கணக்கின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்டு கணக்குகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நீதிமன்ற தண்டப் பண வருமானம் ரூபா 4,310,826 ஆக இருந்த போதிலும், அது ரூபா 2,524,955 ஆக நிதி செயற்பாடுகள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,422,927 ஆக இருந்த போதிலும், அது ரூபா 3,000,000 ஆக நிதி செயற்பாடுகள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளில் மிகை ரூபா 432,927 குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அது எதிர்வரும் ஆண்டின் இறுதி கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாரு நிலுவை நீதிமன்ற தண்டப் பண வருமானம் ரூபா 2,874,820 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,088,950 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,226,086 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,906,771 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற கூட்டுத் தொகை ரூபா 427,936 ஆன கிடைக்க வேண்டிய கணக்கு மீதி போலிச் சொத்தாக நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | மீதியை பதிவழிப்பதற்கு உரிய அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், கிடைக்க வேண்டியவைகளுக்கு உரியதாக ஏற்பட்ட சம்பள மீளளிப்பு நிலுவை 2009 இன் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 97,294 மஹியங்கனை தள வைத்தியசாலைக்கு கிடைத்திருந்தமையால் அதனை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | போலிச் சொத்துக்களை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு காசுப் புத்தகத்திற்கும் வங்கி கூற்றில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் இடையே வேறுபாட்டை காண்பித்து தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 40,619 இணக்கமின்மை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இணக்கம் செய்யப்படாத கணக்கு மீதிகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்தல் சட்டத்தின் 02 ஆம் பந்தி | சபையின் 20 உறுப்பினர்கள் 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை. | உரிய படிவங்கள் உறுப்பினர்களுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், சபைக்கு கைளிக்கப்பட்ட மாதிரி படிவம் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வருடாந்தம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,317,436 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,554,458 ஆகும்.

### 2.2 நிதி கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மஹியங்கனை நகரத்தில் அரசாங்க வங்கியொன்றில் பேணிச் செல்லப்படுகின்ற வங்கி நடைமுறைக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி மற்றும் அத்திகதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் மீதிக்கும் இடையே வங்கி இணக்க விபரங்களின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 575,579 இணக்கம் செய்யப்படாத மீதியை இனங்கண்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கம் செய்யப்படாத மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்குகளில் இணக்கமின்மைகளை இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 3,001,655 | 3,001,655 | 2,118,521 | 883,134 | 3,001,655 | 3,001,655 | 1,713,174 | 1,288,481 |
| (ii) | வாடகை | 24,471,649 | 19,649,816 | 14,098,758 | 5,551,058 | 24,471,649 | 24,512,072 | 14,516,996 | 9,995,076 |
| (iii) | ஏனைய வருமானம் | 9,500,000 | 10,051,133 | 12,129,207 | (2,078,074) | 9,500,000 | 10,599,091 | 8,452,924 | 2,146,167 |
| | மொத்தம் | 36,973,304 | 32,702,604 | 28,346,486 | 4,356,118 | 36,973,304 | 38,112,818 | 24,683,094 | 13,429,724 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரியும் வரியும்**<br>02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை வீத வரியும் ரூபா 1,576,064 மற்றும் நீர்க் கட்டணம் ரூபா 610,739 என்பன மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை பணம் மற்றும் வரியை விரைவாக அறவிடல் வேண்டும். |
| **(ஆ) முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம்**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,088,950 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 1,906,771 அறவிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப் பணம் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளதுடன், அது 03 மாதங்களில் நிதி 2023 ஆம் ஆண்டில் கிடைத்துள்ளது. இன்னும் மூன்று மாதங்களில் நீதிமன்ற தண்டப்பணம் கிடைப்பதற்கு உள்ளது. | நிலுவை நீதிமன்ற தண்டப் பணம் முத்திரைக் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபைக்குரிய பொது நூலகத்திற்கு ரூபா 700,000 புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக சபை நிதியத்தில் இருந்து நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 97,930 மாத்திரம் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. எனினும், அதற்காக நூலக ஆலோசனைக் குழுவினதும் வாசகர்களினதும் கருத்துரை மற்றும் முன்மொழிவுகள் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் புத்தகங்களை கொள்வனவு செய்யும் போது ஆலோசனைக் குழுவின் பரிந்துரையுடன் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆலோசனைக் குழுவின் பரிந்துரை பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் சபைக்குரிய சுதந்திர ஆயர் வேத மருந்தகத்திற்காக மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 200,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 04 வருட காலத்தில் மருந்துளை கொள்வனவு செய்வதற்காக சபை எந்தவொரு தொகையும் செலவிடாதிருந்தமையால் வருடாந்தம் சுதந்திர ஆயுர்வேத மருந்தகத்தின் சேவை பெறுனர்களில் 1000 – 4000 இற்கு இடையிலான தரப்பினருக்கு திருப்திகாரமான சேவையினை வழங்குவதற்கும் முடியாதிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் ஆயுர்வேத மருந்தகத்திற்காக மருந்துகளை பெற்றுக் கொள்வதற்காக தற்போது பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொது சுகாதார சேவைகளை வழங்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | மஹியங்கனை பிரதேசத்தில் நாளொன்றுக்கு உக்கும் மற்றும் உக்காத கழிவுகள் 03 மெற்றிக் தொன்னுக்கு அண்ணளவான அளவு அகற்றப்படுகின்றது. மீளாய்வாண்டிற்கு 06 வருடங்களுக்கு முன் கழிவுப் பொருள் மீள்சுழற்சி நடவடிக்கைகளுக்காக மஹியங்கனை தெஹிகொள்ள கிராமத்தில் 05 ஏக்கர் அளவிலான நிலம் ஒதுக்கப்பட்டு ரூபா 16,203,454 செலவில் நிரந்தர கழிவுப் பொருள் தளம், அலுவலக கட்டிடம் என்பவற்றை நிர்மாணித்து கட்டிடங்களுக்கு தேவையான மின்சார இணைப்பும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது, எனினும், பிரதேச வாசிகளின் எதிர்ப்பின் | தெஹிகொல்ல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கழிவுப் பொருள் தள கட்டிடம் 2021.08.01 ஆம் திகதி முதல் இது வரை வெளித் தரப்பினருக்கு கூட்டுப் பசளை உற்பத்திக்காக வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. | செலவழிக்கப்பட்டுள்ள தொகைக்கு பொருளாதார ரீதியில் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக அந்த இடத்தில் கழிவுப் பொருள் மீள்சுழற்சி நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய வாடகை மற்றும் கட்டணங்களை அறவிடல் செயலாளரின் பணிப்பொறுப்பாக இருந்த போதிலும், பொதுச் சந்தையின் தரைமாடியில் அமைந்துள்ள 20 கடைகள் தொடர்பாக 2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தரை மாடியின் கடை உரிமையாளர்கள் 25 பேர்களுக்கு ஒரு வருட காலம் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து உடன்படிக்கை தாமதமடைந்திருந்தது, | முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் தொடன்வத்தை புதிய கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் திறந்த வழியில் முறையற்றதாக அகற்றப்பட்டிருந்தமையால் ஈக்கள், எறும்பகள், உயிரினங்கள் பெறுகியமை துர்நாற்றம் வீசியமை, மழை காலங்களின் போது கலவையான கழிவுகள் எடுத்துச் செல்லப்பட்டு கழிவுப் பொருள் தளத்திற்கு அண்மையில் வழிந்தோடி சென்று மஹாவெலி ஆற்றில் சேரும் ஆபத்து காணப்பட்டது. முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டிலும், இந்த நிலையத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ரூபா 38,284,828 செலவிடப்பட்டிருந்தது. | கூட்டுப்பசளை தயாரிக்கின்ற இயந்திரம் மற்றும் கூறுகளாக்கும் இயந்திரம் எங்களிடம் நிறுவனத்திற்கு கிடைத்துள்ளதுடன், பேலின் இயந்திரம் மற்றும் சொப்பின் வெட்டும் இயந்திரம் போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. விரைவாக கூட்டுப்பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட காலம் கழிவுப் பொருள் மீள்சுழற்சிக்காக முறையான திட்டம் தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | (i) பிரதேச சபைக்குரிய இலக்கம் 5035 என்ற காணியில் நிர்மாணிக்கப்பட்ட பழைய சந்தையில் 24 கடைகள் மற்றும் சந்தை வளவில் 20 கொட்டகைக் கடைகள் உடைத்து அகற்றப்பட்டு புதிதாக 88 கடைகள், சினிமா மண்டபம் மற்றும் 32 கொட்டகைக் கடைகளையுடைய சந்தை தொகுதியொன்று தனிப்பட்ட பலரினால் ஒன்று சேர்ந்து ஸ்தாபிக்கப்பட்ட வியாபார சங்கம் மூலம் பணம் சேகரிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு முதல் | மஹியங்களை பிரதேச சபை மற்றும் மஹியங்கனை பொது சந்தை சங்கங்களுடன் உடன்படிக்கை செய்து அரசாங்கத்தின் பங்களிப்பு இன்றி சந்தை சங்கத்தின் பங்குபற்றலுடன் வாடகையாளரிடம் இருந்து பணம் அறவிட்டு ஒப்பந்த நிறுவனம் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே நிர்மாணத்தின் இறுதியில் சபைக்கு | சபைக்குரிய காணியில் நிர்மாணத்தை மேற்கொள்ளும் போது முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டியிருந்ததுடன், விரைவாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்படுகின்ற போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கைளிக்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் நிர்மாணம் செய்யப்படுகின்றது. | |
| (ii) | இவ்வாறான செயற்திட்டத்தை மேற்கொள்ளும் போது செயற்திட்ட அறிக்கை தயாரித்து அது தொடர்பாக ஆய்வு செய்து அதற்காக அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் முறையான உடன்படிக்கையின் பிரகாரம் உரிய செயற்திட்டம் ஆரம்பிக்க வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், செயற்திட்டம் முழுமையாக சபையின் கட்டுப்பாடு இன்றி அமுல்படுத்தப்படுகின்றது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | 2015 மார்ச் 10 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட கட்டிட திட்டத்திற்கு இணங்காத வகையில் கட்டிடத்தின் பிரதான நுழைவு இடம் மற்றும் உத்தேசிக்கப்பட்ட சினிமா மண்டபத்திற்காக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பதுளை மாவட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திகாக வழங்கப்பட்டிருந்த விஷேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையால் ரூபா 21.5 மில்லியன் செலவில் மஹியங்கனை இலங்கை போக்குரவத்து சபை பேரூந்து நிலையத்தில் 29 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. முறையான பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டு கடைகளை | உரிய 29 கடைகளும் பல சந்தர்ப்பங்களின் போது கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், அதன் போது 11 கடைகளுக்கு கேள்வி கிடைத்திருந்தது. அதில் 5 கடைகள் உடன்படிக்கை செய்திருந்த போதும், மிகுதி கடைகள் 6 இல் 03 இற்குரிய கையளித்தல் கட்டளை விதிக்கப்பட்டமையால் உடன்படிக்கை செய்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மிகுதி கடைகளை | புதிய நிபந்தனைகளின் கீழ் முறையான பெறுகைகளின் மூலம் கடைகள் வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகைக்கு வழங்குவதற்காக சபைக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 சனவரி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் கடைகள் முறையாக வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்படாமையின் காரணமாக சபைக்கு 10,040,000 கடை வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கேள்வி கோருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஆ) | 2013 ஒக்டோபர் 25 ஆம் திகதி மஹியங்கனை இலங்கை போக்குவரத்து சபை பேருந்து நிலைய கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு சமர்ப்பித்த ஆகக் கூடிய கேள்வி தொகை ரூபா 1,200,000 ஆக இருந்ததுடன், ஒரு வாடகையாளர் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்தமையால் கேள்வி திறக்காமல் சபை தீர்மானத்தின் பின்னர் அறிவிக்கப்பட்டு உரிய கேள்விதாரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முறையான உடன்படிக்கை செய்து கடைகளை வாடகைக்கு வழங்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,348,000 வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | உரிய கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக பொதுச் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், தற்போது முறையாக உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. | புதிய நிபந்தனைகளின் கீழ் முறையான பெறுகைகளின் மூலம் கடைகள் வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும். |
| (இ) | சபையினால் வாராந்த சந்தை வளவில் பழைய கடைகளை மீளமைத்தல் சட்ட ரீதியான முறைமையில் மேற்கொள்ளாமையினால் வாராந்த சந்தை வளவில் காணப்பட்ட 49 கடைகளில் இருந்து 2012 நவம்பர் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபைக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 5,776,700 ஆகும். | பதிலளிக்கப்படவில்லை. | சட்ட ரீதியான முறைமையின் பிரகாரம் மற்றும் சபை நிதியத்திற்கு பாதகமில்லாத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய ரூபா 4,522,404 ஆன 02 டெக்டர் வண்டிகள் மற்றும் கம்பெக்டர் வண்டி மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சபை வளவிலும் மஹியங்கனை பிரதேசத்திலும் தனியார் நிறுவனம் ஒன்றில் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கம்பெக்டர் வண்டியில் கழிவுகளை நெருக்குவதற்கு உள்ள பகுதி உரிய வகையில் செயற்படாமையினால் கழிவுப் பொருட்களை சேகரிக்கும் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு வசதியற்றிருந்ததுடன், டக்டர் வண்டியை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குரிய சொத்துக்களை ஆக்கபூர்மான பணிகளுக்காக செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) மோட்டார் கிரேடர் மற்றும் கல் உருளை வாடகைக்கு வழங்குவதற்காக 2021 ஆம் ஆண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 1,129,900 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் கிரேடர் மற்றும் கலி பௌஸர் வாடகைக்கு வழங்குவதற்காக 2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 281,561 ஆக இருந்ததுடன், கலி பௌஸருக்குரிய நிலுவையான ரூபா 127,461 தொகை 2023 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை பெறுமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது சுகாதார பரிசோதகரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்படாமல் மற்றும் சுற்றாடல் ஆய்வு மேற்கொள்ளப்படாமலும், மீளாய்வாண்டின் போது சபை நிதியித்தில் இருந்து ரூபா 778,500 செலவிடப்பட்டு நிசல அரண சுடலைக்கூட வளவிற்கு அடுத்தால் வழிந்தோடும் மஹாவலி கங்கைக்கு அருகில் மலக் கழிவுகளை அகற்றுவதற்காக மலக் குழியொன்று அமைக்கப்பட்டிருந்தது. 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி பரிசோதனை திகதியிலும் மலக் கழிவுகள் மலக் குழிகளில் இடப்படாதிருந்ததுடன், 07 மாத காலத்தில் அதன் சுவர் உடைந்து குழியின் இயலளவு குறைவடைந்திருந்தது. | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் மலக் குழி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்போது மலக் குழிகள் இரண்டும் மலக் கழிவுளை இடுவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. | மலக் கழிவுகளை அகற்றுவதற்கு மலக் குழிகள் தயாரிக்கப்படல் வேண்டும். |